# பத்திரிக்கை செய்தி

மதுரை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கையாக மாவட்ட நிர்வாகத்தால் 24 மணிநேரமும் செயல்படும் அவசரகால கட்டணமில்லா தொலைபேசி எண் 1077, தொலைபேசி எண் 0452-2546160, மற்றும் அலைபேசி எண் 9597176061 செயல்பட்டு வருகிறது. இந்த தொலைபேசி எண்ணிற்கு பொது மக்கள் கொரோனா வைரஸ் நோய் தொடர்பாக தங்களது சந்தேகங்கள்/ கோரிக்கைகள் மற்றும் முறையீடுகளை தெரிவிக்கலாம். மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கிருமி நாசினி கொண்டு தூய்மைப் படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பள்ளி / கல்லூரி/ அங்கன்வாடி மையங்கள் 31.03.2020 வரை மூட அரசு உத்தரவிட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் அனைத்து திரையரங்குகள்/ வணிக வளாகங்கள்/ கேளிக்கை அரங்குகள்/ நீச்சல் குளங்கள்/ உடற்பயிற்சி மையங்கள்/ பூங்காக்கள்/ அருங்காட்சியகங்கள்/கேளிக்கை விடுதிகள்/ பார்கள்/ விளையாட்டு அரங்குகள் ஆகியன 31.03.2020 வரை மூடப்பட்டிருக்கும். தொழிற்சாலைகளில் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கிருமி நாசினி, முகக்கவசம் ஆகியன போதிய அளவில் வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. சளி, இருமல், காய்ச்சல் உள்ளவர்கள் கொரோனா நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனையை அணுகி உரிய பரிசோதனை எடுத்துக்கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொது மக்கள் சுற்றுலா செல்வதை தவிர்க்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கொரோனா வைரஸ் நோய் தொடர்பாக எந்த வதந்திகளையும் நம்ப வேண்டாம். உறுதி செய்யப்படாத எந்த தகவல்களையும் பரப்ப வேண்டாம். கொரோனா வைரஸ் காய்ச்சல் தொடர்பாக பொய்யான செய்தியோ/ வதந்தியோ/ அல்லது தேவையற்ற பீதியை செய்தியாகவோ, சமூக வலைதளத்திலோ அல்லது வேறு எந்த வடிவிலோ பரப்பினால் கடுமையான நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும். அனைத்து அரசு அலுவலகங்களும் வழக்கம் போல் இயங்கும். பொதுமக்கள் இச்சேவையை பயன்படுத்தி தகவல்கள் தெரிவிக்குமாறு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் டி.ஜி. வினய் இ.ஆ.ப., கேட்டுக் கொள்கிறார்.

17/3/2020

மாவட்ட ஆட்சியர்,
மதுரை.

17/3/20